World Christian Fellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# ஏசாயாவின் புஸ்தகம்

### பெயரின் பொருள்:

ஏசாயா என்பதற்கு **"தேவனே இரட்சிப்பு"** ***"The LORD is salvation"*** என்று பொருள். இது யோசுவா, எலிசா மற்றும் இயேசு என்னும் பெயர்களை போன்றது. புதிய ஏற்பாட்டு பகுதியில் ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் சுமார் 65 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் பெயர்களை விட அதிகமாக ஏசாயாவின் பெயர் 20 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

எசாயவிற்கு இரண்டு குமாரர் இருந்தனர்; மூத்தவன் "**சேயார்யாசூபு**" (**Shear-jashub**) (ஏசாயா 7:3), அதற்கு "**சிதறடிக்கப்பட்டவன் திரும்புவான்**" ("A remnant shall return") என்று பொருள். இளையவன் "**மகேர்-சாலால்-அஷ்-பாஸ்**" (**Maher-Shalal-Hash-Baz**) (ஏசாயா 8:3), இதற்கு "**சீக்கிரம் கெட்டுப்போய், விரைவாக கொள்ளைபோவான்**" ("Spoil quickly, plunder speedily") என்று பொருள்.

### ஏசாயா புஸ்தகத்தின் சிறப்பம்சம் :

இந்த புஸ்தகம், வேதாகமத்திற்குள் ஒரு வேதாகமம் .

- மொத்தம் 66 அதிகாரங்கள்.
- முதல் 39 அதிகாரங்கள் பழைய ஏற்பாட்டை குறிக்கும்
- மீதமுள்ள 27 அதிகாரங்கள் புதிய ஏற்பாட்டை குறிக்கும்

இயேசுவும் பவுலும் மற்ற பழைய ஏற்பாட்டு புஸ்தகங்களை காட்டிலும் ஏசாயா புஸ்தகத்தை அதிகமுறை மேற்கோள் காட்டுகின்றனர்.

ஏசாயா வெவ்வேறாக 2,186 வார்த்தைகளை பயன்படுத்தி இந்த புஸ்தகத்தை எழுதுகிறார்.

- எசேக்கியேல் – 1,535 வார்த்தைகள்
- எரேமியா – 1,653 வார்த்தைகள்
- சங்கீதம் – 2,170 வார்த்தைகள்

ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவின் வரலாற்றையும் எழுதியதாக IIநாளாகமம் 32:32ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏசாயாவின் முதல் 39 அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை போல, பழைய ஏற்பாடு இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றையும் பாவங்களையும் குறித்து அறிவிக்கிறது.

அதிகாரங்கள் 40-66ல் குறிப்பிடப்பட்டிருப்பதை போல, புதிய ஏற்பாடு கிறிஸ்துவையும் அவருடைய ஊழியத்தையும் குறித்து அறிவிக்கிறது.

புதிய ஏற்பாடு யோவான் ஸ்நானகனின் ஊழியத்திலிருந்து துவங்குகிறது மத்தேயு 3:1-3.


ஏசாயாவின் இரண்டாவது பகுதியும் யோவான் ஸ்நானகனின் ஊழியத்தை குறித்து தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறது ஏசாயா 40:3-5.

புதிய வானத்தையும் புதிய பூமியையும் குறிப்பிட்டு புதிய ஏற்பாடு நிறைவு செய்யப்படுகிறது. வெளி 21:1-3.

அதே காரியங்களை ஏசாயா 66:22ல் விவரித்து ஏசாயா தமது புத்தகத்தை நிறைவு செய்கிறார்.

**கோரேசு**:

*பெரிசியாவிலும் பாபிலோனிலும் உள்ள யூதர்கள் எருசலேமிற்கு திரும்பி அந்த நகரத்தை மீண்டும் கட்ட வேண்டும் என்ற பெரிசியா ராஜாவின் அரசாணையை நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசனமாக உரைத்தார் (ஏசாயா* 44& 45*).*



*மூன்று மகத்தான ரட்சிப்பின் அழைப்புகளை ஏசாயாவின் புஸ்தகத்தில் நாம் காண முடியும்.*

***ஏசாயா* 1:18**, *"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்."*

***ஏசாயா* 45:22**, *"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை."*

***ஏசாயா* 55:1-2**, *"1. ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும்கொள்ளுங்கள். 2. நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத*

*பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். ”*

*கிறிஸ்து கன்னிகையினிடத்தில் பிறப்பார் என்றும்* (7:14), *கிறிஸ்துவின் இரட்டை பண்புகளையும்* (9:6) *பழைய ஏற்பாட்டில் குறிப்பிடுவது ஏசாயா மாத்திரமே.*

*லூசிபர்* (Lucifer) *கீழே தள்ளப்பட்டு சாத்தானாக ஆவதற்கு முன் அவனுடைய ஆதி நாட்களை குறித்து பழைய ஏற்பாட்டில் குறிப்பிடுவது ஏசாயா (*14:12-15*) மற்றும் எசேக்கியேல் (*28:11-18*) புஸ்தகங்கள் மாத்திரமே.*

## ***எழுதப்பட்ட வருடம் – யாருக்காக எழுதப்பட்டது:***

*ஏசாயாவின் புஸ்தகம் கி.மு*739 - *கி.மு*636 *-க்குள் எழுதப்பட்டி-ருக்கலாம். ஏசாயா தீர்க்கதரிசி எருசலேமை சார்ந்தவர். மனாசேயின் அரச குடும்பத்துற்கு மிக நெருக்கமானவராக இருக்கலாம்.*

*அவரது தந்தையின் பெயர் ஆமோஸ் (*Amoz*). யூதாவின் கீழ்க்கண்ட நான்கு அரசர்களுக்கு ஏசாய தீர்க்கதரிசியாக இருந்தார்.*

1. *உசியா (* 791–739 *கி.மு)*
2. *யோத்தாம் (* 750–731 *கி.மு)*
3. *அஹாஸ் (* 731–715 *கி.மு)*
4. *எசேக்கியா (* 715–686 *கி.மு)*

*ராஜாவை எளிதாக சந்திக்க உரிமை பெற்றவர் (*7:3*). அந்த காலத்தில் ஆசாரியர்களையும் உடனுக்குடன் அவர் சந்திக்ககூடியவர் (*8:3*).*

*உசியா ராஜா கி.மு.* 739*ல் மரித்தபோது, தேவன் ஏசாயாவை தமது ஜனங்களுக்கு தீர்க்கதரிசியாக அழைத்தார். தான் ஒடுக்கப்படுவோம்*

*என்றும் தன்னுடைய ஊழியம் மிகவும் பயனுள்ளதாக இருக்காது என்றும் அறிந்திருந்தபோதும், ஏசாயா தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டார்.*


***ஏசாயா* 6:9-13**, *9. அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி: நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். 10. இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார். 11. அப்பொழுது நான்: ஆண்டவரே, எதுவரைக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர்: பட்டணங்கள் குடியில்லாமலும், வீடுகள் மனுஷசஞ்சாரமில்லாமலும் பாழாகி, பூமி அவாந்தரவெளியாகி, 12. கர்த்தர் மனுஷரைத் தூரமாக விலக்குவதினால், தேசத்தின் நடுமையம் முற்றிலும் அசைக்கப்படும்வரைக்குமே. 13. ஆகிலும் அதில் இன்னும் பத்திலொரு பங்கிருக்கும், அதுவும் திரும்ப நிர்மூலமாக்கப்படும்; கர்வாலிமரமும் அரசமரமும் இலையற்றுப்போனபின்பு, அவைகளின் அடிமரம் இருப்பதுபோல, அதின் அடிமரமும் பரிசுத்த வித்தாயிருக்கும் என்றார்.*

*it is cut down, so Israel’s stump will be a holy seed*.” (NLT)

*ஏசாயா தீர்க்கதரிசி கி.மு* 681 *வரை உயிரோடு இருந்தார். அசீரிய ராஜா சனகெரிப்பின் மரணத்தை குறித்தும் எழுதியுள்ளார் (*37:38*). மனாசே ராஜாவின் காலத்தில், ஏசாய இரண்டு துண்டாக வெட்டப்பட்டு மரணத்தை சந்தித்தார் என்று வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன.*

*யூதாவின் தெற்கு ராஜ்ஜியத்திற்கு ஏசாய தீர்க்கதரிசியாக இருந்தார். அசீரியர்கள் வடக்கு தேசத்தை கைப்பற்றியபோது, ஏசாயா யூதாவில் தீர்க்கதரிசியாக இருந்தார். பாபிலோன் உலகில் மாபெரும் ராஜ்ஜியமாக உருவாவதற்கு 96 வருடங்களுக்கு முன், பாபிலோனியர்களால் யுதாவிற்கு நியாயத்தீர்ப்பு வரும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.*

## *வரலாற்று பின்னணி:*




***சற்று நேரம் ஒதுக்கி II இராஜாக்கள் 15 முதல் 25 வரை வாசியுங்கள்.***

***உசியா ராஜா*** 52 *ஆண்டுகள்* 790- 739 *கி.மு வரை ஆட்சி செய்தார். இந்த காலத்தில் தேசம் வர்த்தகத்திலும் இராணுவத்திலும் (*business and military*) வலுவடைந்தது. நகரங்களில் மதில்கள், கோபுரங்கள் மற்றும் அரண்கள் கட்டப்பட்டன. செங்கடலில் ஒரு துறைமுகமும் கட்டப்பட்டது. இவை மேலோங்கின அதே வேளையில் யூதா தேசம் ஆவிக்குரிய காரியங்களில் பின்னடைந்து கொண்டிருந்தது. ஆசாரியருக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை தன கையில் எடுத்தபோது உசியா ராஜா சரிவை சந்திக்க தொடங்கினார்.*


**II நாளாகமம் 26:16-20**, *அவன் பலப்பட்டபோது, தனக்குக்கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம்மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். 17. ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து, 18. ராஜாவாகிய உசியாவோடு எதிர்த்துநின்று: உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல; தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும்; பரிசுத்த ஸ்தலத்தை விட்டுவெளியே போம்; மீறுதல் செய்தீர்; இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது என்றார்கள். 19. அப்பொழுது உசியா கோபங்கொண்டான்; அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறபோது ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று. 20. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்தவனென்றுகண்டு, அவனைத் தீவிரமாய் அங்கிருந்து வெளிப்படப்பண்ணினார்கள்; கர்த்தர் தன்னை அடித்ததினால் அவன் தானும் வெளியேபோகத் தீவிரப்பட்டான்.*

*உசியா ராஜாவிற்கு பிறகு அவனுடைய குமாரன் யோதாம்* 18 *ஆண்டுகள்* 750 *முதல்* 732 *வரை அரசாண்டான். யோதாம் ராஜாவாக இருந்தபோது, திக்லாத்-பூல்செர் (*Tiglath-Pileser*) (***II** *ராஜா* 15:19*) என்ற ராஜாவின் கீழ் அசீரியா உலகின் மிகப்பெரும் ராஜ்யமாக உருவானது. யோதாம் தன தகப்பனைப்போல் செம்மையானவனாக இருந்தாலும், ஆவிக்குரிய அருவருப்புகள் இன்னும் தேசத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன (***II** *ராஜா* 15*).*

யோதாமிற்கு பிறகு, அவன் குமாரனாகிய ஆகாஸ் தனது 25ஆவது வயதில் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். ஆகாஸ் 16 வருடம் யுதாவை அரசாண்டான் (735-715 கி.மு.). இஸ்ரவேல் தேசம் அசீரியா ராஜாவிற்கு எதிராக போருக்கு செல்லும்போது, ஆகாஸ் அவர்களோடு சேர்ந்து போரிட மறுத்தான். ஆகையால், இஸ்ரவேலின் வடக்கு தேசம் ஆகாஸ் ராஜாவை அந்த பதவியிலிருந்து துரத்த நினைத்தனர். இதன் காரணமாக இஸ்ரவேலுக்கும் ஆகாசுக்கும் 734 கி.மு. வில் (2 ராஜா 16:5) போர் மூண்டது. பதட்டத்தில் ஆகாஸ், அசீரியர்களிடம் சென்று உதவி கோரினான் (2 ராஜா 16:7), அவர்களும் சந்தோசமாக அவனுக்கு உதவி செய்து காசா (Gaza), கீலேயாத் (Gilead) மற்றும் தமஸ்குவை (Damascus) கைப்பற்றினர். இறுதியில் சாலோமோனின் தேவாலயத்தில் அந்நிய தேவர்களுக்கு பலிபீடம் கட்டினார்கள் (2 ராஜா 16:10-16). இஸ்ரவேலின் வடக்கு தேசத்தின் தலை நகரான சமாரியாவை அசீரியர்கள் கைப்பற்றி, இஸ்ரேவேலில் திறமைசாலிகளை மாத்திரம் சிறைபிடித்து சென்றனர் (2 ராஜா 17:6-24).

ஆகாசின் குமாரனாகிய **எசேக்கியா** யூதாவின் 13-வது ராஜாவானான். அவன் யூதாவை கி.மு. 715 முதல் 686 வரை அரசாண்டான். கி.மு. 701ல் எசேக்கியா மிகவும் வியாதிப்பட்டு மரிக்கும் தருவாயில் இருந்தபோது, தேவன் அவனுக்கு இன்னும் பதினைந்து ஆண்டுகள் கூட கொடுத்தார் (2 ராஜா 18 & ஏசாயா 38). அசீரியா உள்நாட்டு பூசல்களால் சற்று தளர்ந்து போயிருந்த வேளையில், எசேக்கியா அசீரியர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்த மறுத்தான் (2 ராஜா 18:7). ஆகையால், கி.மு. 701ல் அசீரிய ராஜாவாகிய செனகெரிப், இஸ்ரவேலின் கடற்பகுதிகளை முற்றுகையிட்டு, இஸ்ரவேலின் தென் பகுதியில் எகிப்து வரை போரிட்டான். இந்த போர்களில், பல யூதேயாவின் பட்டணங்களையும் ஜனங்களையும் கொள்ளையடித்து

அசீரியாவிற்கு கொண்டு சென்றான். லாகீசில் (Lachish) அசீரிய ராஜா போர் தொடுத்திருந்த வேளையில், எருசலேமை முற்றுகையிட ஒரு படையை அனுப்பினான் (2 Kings 18:17–19:8; Isaiah 36:2–37:8). செனகெரிப் முதல்முறை எருசலேமை முற்றுகையிட்டு தோற்ற வேளையில், இரண்டாம் முறை எசேக்கியா ராஜாவிற்கு தூதுவர்களை அனுப்பி சரணடைய கோரினான். ஆனால் ஏசாயா தீர்க்கதரிசியின் அறிவுரையின்படி எசேக்கியா ராஜா மறுத்துவிட்டான். திடீரென ஏற்பட்ட சங்காரத்தின் நிமித்தம் அசீரிய படை வீழ்ந்தது. அப்போது நினிவேவிற்கு திரும்பிய செனகெரிப் மீண்டும் யுதேயாவின் பக்கம் திரும்பவில்லை.




எசேக்கியா ராஜாவிற்கு பின் வந்த மனாசே ராஜாவால் ஏசாயா தீர்க்கதரிசி கொல்லப்பட்டார். ஏசாயா தீர்க்கதரிசி பேசக்கூடாது என்று மனாசே கட்டளை விதித்தான். ஆகவே ஏசாயா தீர்க்கதரிசி எழுதத்தொடங்கினார். இறுதியில், ஒரு மரப்பெட்டியை வரவழைத்து, அதில் ஏசாயாவை உள்ளே வைத்து அவரை இரண்டு துண்டாக வெட்டினான் என்று எபிரேயர் 11:37ல் குறிப்பிடபட்டுள்ளதை குறித்து வேத வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

## *எழுதியவரை குறித்த சர்ச்சை* - **Authorship of the book**

*பல பண்டிதர்கள் ஏசாயா தாமே* 1-39 *வரை உள்ள அதிகாரங்களை எழுதினார். பின்னர் அவருடைய ஈர்ப்பால் வேறு ஒருவர்* 40-66 *வரை உள்ள அதிகாரங்களை இயற்றினார் என்று கூறுவார்கள்.*

*இதற்கு அவர்கள் கூறும் காரணம், எழுதும் பாணியிலும், வார்த்தைகளிலும், சொல்லப்படும் காரியத்திலும் திடீரென ஏற்படும் மாற்றம். அதோடு, அதில் கோரேசு ராஜாவை பற்றிய மிக துல்லியமான காரியங்கள் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டுள்ளது, அவை யாவும் கோரேசு ராஜாவின் காலத்திற்கு முன்னதாக அவ்வகவு துல்லியமாக எழுதப்பட வாய்ப்பே இல்லை என்று நம்புகின்றனர்.*

*இந்த கருத்தை நான் எற்றுகொள்வதில்லை.*

*ஏசாயாவின் கருப்பொருள் மிகத்தெளிவாக இருக்கிறது. இந்த இரண்டு பகுதிகளுமே ஒரே கருப்பொருளை சார்ந்து இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியும். ஏசாயா தீர்க்கதரிசி வெவ்வேறு காலகட்டங்களில் எழுதின படியால் எழுத்து பாணியில் வித்தியாசம் ஏற்பட்டிருக்கலாம்.*

*ஆனால் இந்த புத்தகத்தை ஒருவரே இயற்றினார் என்பதற்கு பின்வரும் கரணங்கள் உள்ளன:*

1. *இயேசுவும் அப்போஸ்தலனாகிய பவுலும் ஏசாயா தீர்க்கதரிசி கூறியதாக கீழ்க்கண்டவற்றை மேற்கோள் காட்டுகிறார்கள்:*
   a. *லூக்கா* 4:18 - *பரிசுத்த ஆவியினால் என்னை அபிஷேகம் பண்ணினார் – ஏசாயா* 61:1
   Luke 4:18 Anointed me with Holy Spirit Isaiah 61:1

b. *லூக்கா* 19:46 *ஜெபவீடு ஏசாயா* 56:7
Luke 19:46 A house of prayer Isaiah 56:7

c. *யோவான்* 12:38 *எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?* (*ஏசாயா* 53:1)
John 12:38 Who has believed our report? (Isaiah 53:1)

d. *ரோமர்* 2:24 *தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே ஏசாயா* 52:5
Romans 2:24 Blasphemy among Gentiles Isaiah 52:5

e. *ரோமர்* 3:15-17 *அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது ஏசாயா* 59:7-8
Romans 3:15-17 Feet swift to shed blood Isaiah 59:7-8

f. 2 *கொரி* 6:2 *அநுக்கிரக காலம், இரட்சணியநாள் ஏசாயா* 49:8
2 Corinthians 6:2 Acceptable time, day of salvation Isaiah 49:8

g. 2 *கொரி* 6:17 *அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் ஏசாயா* 52:11
2 Corinthians 6:17 Come out from among them Isaiah 52:11

2. *யூத எழுத்தாளர்கள் இந்த புத்தகத்தை ஒருவரே எழுதியதாக நம்புகின்றனர். எக்லசியஸ்டிகஸ் (*Ecclesiasticus*) கிமு இரண்டாம் நூற்றாண்டு புத்தகம் ஒரே எழுத்தாளர் என்று குறிப்பிடுகிறது. "வல்லமையின் ஆவியினால் அவர் (ஏசாயா) இறுதி காரியங்களை கண்டு, சீயோனில் துயரப்படுபவர்களுக்கு ஆறுதல் கூறினார்" (*48:24*) என்று அந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நேரடியாக ஏசாயா* 61:3-*ஐ குறிக்கிறது. அதுமட்டுமல்லாமல் கோரேசு, ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களை வாசித்து அவைகளை*

*நிறைவேற்ற மனதை இருந்தான் என்று* Josephus *(??) கூறுகிறார்.*

3. *ஏசாயா புத்தகத்தின் சுருள் ஒரே* 24 *அடி நீளம் கொண்ட ஒரே சுருளாக* 66 *அதிகாரங்களையும் உள்ளடக்கியபடி கண்டெடுக்கப்பட்டது. ஆகிலும் ஏசாயாவின் மொன்று பகுதிகளுக்கும் தனித்தனி உரிமை கோரி வேறு எந்த புத்தகமும் கோரவில்லை. சாவு கடல் சுருள்கள் என்று சொல்லப்படும்* Dead Sea Scrolls *கண்டெடுக்கப்பட்டதில்,* *ஏசாயா* 40:1, *அதற்கு முந்தய அதிகாரத்தின் வசனங்கள்* 38:9–39:8 *உள்ள வரியில் காணப்படுகிறது.*

4. *ஏசாயா புத்தகத்தின் முதல் பகுதியிலும்* (1-39) *பிற்பகுதியிலும்* (40-66) *ஒரே மாதிரியான பிரச்சனைகள் காணப்படுகின்றன.*

- *இரத்தம் சிந்துதலும் வன்முறையும் வெறுக்கப்படுகிறது* (1:15; 59:3, 7),
- *அநீதி* (10:1-2; 59:4-9),
- *கபட வேஷம்* (Isa. 29:13; 58:2-4),
- *காம விகாரம்* (Isa. 1:29; 57:5).

*ஏசாயாவின் முற்பகுதியும் பிற்பகுதியும், கர்த்தரை "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்று அழைக்கிறது. ஏசாயா புஸ்தகத்தை தவிர்த்து இந்த நாமம் 5 முறை மாத்திரமே வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

## *எழுதப்பட்டதின் நோக்கம்:*

*பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் இயேசு கிறிஸ்துவை குறித்து விரிவான தீர்க்கதரிசனத்தை ஏசாயா புத்தகம் மாத்திரமே நமக்கு அறிவிக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் முழு வாழ்வையும் அறிவிப்பதை நாம் காணலாம்.*

- *அவருடைய வருகையின் அறிவிப்பு (ஏசாயா 40:3–5)*
- *கன்னிகையிடம் அவர் பிறப்பது (7:14)*
- *அவர் சுவிசேஷம் அறிவிப்பது (61:1)*
- *பலியாக அவர் மரிப்பது (52:13–53:12)*
- *மீண்டும் அவர் வந்து தம்முடையவர்களை தம்மோடு சேர்த்துக்கொள்வது (60:2–3)*

*இந்த பகுதிகள் மாத்திரமல்லாமல் ஏசாயா புத்தகத்தில் இன்னும் கிறிஸ்துவை குறித்து அநேக வசனங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஜனங்களை அவர்களின் பாவங்களின் பிடியிலிருந்து மீட்டு ரட்சிக்கும் தேவன் ஒருவரே; அவருக்குள் நம்பிக்கையை உண்டாக்கும் புத்தகமாக இது திகழ்கிறது.*

*ஏசாயாவின் மையப்பொருள் தெளிவாக வசனம் 12:2ல் சொல்லப்பட்டுள்ளது: "***இதோ, தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்; கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.***"*

*இந்த வசனம், "யேகோவா தேவனே இரட்சிப்பு" (*salvation of Yahweh*) என்னும் ஏசாயாவின் பெயரின் பொருளை எதிரொலிக்கிறது.*

*முதல் முப்பத்து-ஒன்பது அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பை வாசிக்கும்போது, "இந்த நியாயத்தீர்ப்பு இருக்கும்போது எப்படி இரட்சிப்பு இருக்கும்? இவை இரண்டும்*

எப்படி ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கும்?" என்ற கேள்வி எழலாம்.

இங்கு நியாயத்தீர்ப்பு சொல்லப்பட்டிருப்பதே நாம் ரட்சிக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகத்தான். நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன், ஏன் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற அவசியத்தை நாம் உணர வேண்டும். Before we can have salvation, we must have a need for it!

ஆகவே முதல் முப்பத்து-ஒன்பது அதிகாரங்களும் கர்த்தரை விட்டு புறமாக திரும்பின ஜனங்களுக்கு உள்ள நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறது. தொடர்ந்து கர்த்தருக்கு விரோதமாய் இருப்பவர்கள் நியாயத்தீர்ப்பு அடைவார்கள் என்று நமக்கு கான்பிக்கிறது.

அதே வேளையில், கர்த்தர் தமது ஜனத்திற்கு கொடுத்த வாக்குத்தத்தத்தில் எப்படி உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதையும் நாம் இந்த பகுதிகளில் காணலாம். தம்மேல் உண்மையாய் நம்பிக்கையுள்ளவர்களை அவர் பாதுகாத்து, தம் பிள்ளைகளுக்கென்று அவர் ஆயத்தப்படுத்தின புதுப்பிக்கப்பட்ட மகிமையின் உலககிற்கு அவர்களை கடைசி நாட்களில் நடத்தி செல்வார் (65:17–66:24).

இஸ்ரவேல் ராஜ்ஜியம் இரண்டாக பிரிக்கப்பட்ட காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார். அவருடைய அநேக தீர்க்கதரிசனங்கள் தென் தேசமாகிய யுதாவிற்கு சொல்லப்பட்டது.

ஏசாயாவின் நாட்களில் இருந்த உணர்வில்லாத ஆராதனை சடங்குகளையும் (1:10–15),

ஜனங்களில் பலர் விழுந்துபோன விக்கிரக வழிபாடுகளையும் (40:18–20) கண்டித்து அவருடைய தீர்க்கதரிசனங்கள் இருந்தன. இப்படி ஜனங்கள் வழிவிலகிபோவதால் பாபிலோனியர்கள் கையில் அகப்படுவார்கள் என்றும் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார் (39:6,7).

மற்ற எல்லா தீர்க்கதரிசிகளை பார்க்கிலும் வரப்போகிற கர்த்தருடைய நாளை குறித்தும் அதன் பின் வரும் காரியங்களை

*குறித்தும் ஏசாயா அநேக காரியங்களை அறிவிக்கிறார். எதிர்காலத்தில் ஏற்படும்:*

- *குணங்களின் மாற்றம் (*changes in nature*),*
- *மிருக ஜீவன்களின் மாற்றம் (*animal world*),*
- *பிற தேசங்களின் மத்தியில் இஸ்ரவேல் தேசத்தின் நிலை (*Jerusalem's status among the nations*)*,
- *ஒடுக்கப்பட்ட ஊழியனின் ஆளுமை (*Suffering Servant's leadership*) உட்பட பல காரியங்களை ஏசாயா அறிவிக்கிறார்.*

*பிற்காலத்தில் நடக்கப்போகும் காரியங்களை குறித்து ஏசாயா சுருக்கமாக அறிவித்துவிட்டார். கால முறைப்படி அவை விவரிக்கப்படவில்லை ஆனாலும் சுருக்கமாக ஏசாயா புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.*

*உதாரணமாக, மேசியாவின் முதல் வருகைக்கும் இரண்டாவது வருகைக்கும் உள்ள கால இடைவெளி விவரிக்கப்படவில்லை. அதேபோல், ஆயிரவருட அரசாட்சிக்கும் கர்த்தரின் நித்திய அரசாட்சிக்கும் உள்ள வித்தியாசங்கள் யோவானின் வெளிப்படுத்தலில் (20:1–10; 21:1–22:5) இருப்பதைப் போன்று விரிவாக இல்லை. கர்த்தரின் தீர்மானத்தின்படி படிப்படியாக இவை வெளிப்படுத்தப்டுவதால், இவற்றின் ஆழங்கள் யாவும் வேறொரு காலத்தில் யோவான் தீர்க்கதரிசனம் உரைக்கும்வரை காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது.*

*"சுவேசேஷ தீர்க்கதரிசி" (*evangelical Prophet*) என்கிற பெயருக்கு ஏற்றபடி, கர்த்தரின் கிருபையை குறித்து ஏசாயா தீர்க்கதரிசி அதிகமாக தமது கடைசி 27 அதிகாரங்களில் விவரிக்கிறார். அந்த கிருபையின் மையப்பகுதியாக ஒப்பற்ற அதிகாரமான 53-ஆம் அதிகாரத்தில் கிறிஸ்துவை அடிக்கப்படும் தேவ ஆட்டுக்குட்டியாக காண்பிக்கிறார்.* The centrepiece is Isaiah's unrivalled chapters 53, portraying Christ as the slain Lamb of God.

## ***வரையறை***

***பழைய ஏற்பாடு***

I. ***எருசலேமின் நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்*** - **Judgment and hope for Jerusalem (1-12)**

II. ***அனைத்து தேசங்களின் நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்*** - **Judgement and hope for all Nations (13-27)**

III. ***எருசலேமின் எழுச்சியும் வீழ்ச்சியும்*** - **Rise and fall of Jerusalem (28 -39)**

***புதிய ஏற்பாடு***

I. ***நம்பிக்கையின் அறிவிப்பு*** - **Announcement of Hope (40 -48)**

II. ***தேவ சித்தத்தை நிறைவேற்றும் ஊழியன்*** - **Servant Fulfil God's Mission (49-55)**

III. ***தேவ ராஜ்ஜியத்தை சுதந்தரிக்கும் ஊழியன்*** - **Servant inherits God's Kingdom (56-66)**

## ***இரண்டு பகுதிகளுக்கும் உள்ள வித்தியாசங்கள்***

| ***அதிகாரங்கள்* 1-39** | ***அதிகாரங்கள்* 40-66** |
|---|---|
| கெட்ட செய்தி | நல்ல செய்தி |
| இஸ்ரவேலின் நடவடிக்கை | தேவ நடவடிக்கை |
| நீதி | இரக்கம் |
| எதிர்ப்பு | ஆறுதல் |
| இஸ்ரவேலின் தேவன் | ஆண்ட சராசரங்களின் தேவன் |
| குறிப்பிட்ட ஒரு தேசம் | சர்வதேசம் |
| அக்கினியாய் பட்சிக்கும் தேவன் | அப்பா – தந்தையாம் தேவன் |
| அடிப்பதற்கு உயர்த்தப்பட்ட கரம் | காக்கப்படுவதுற்கு நீட்டப்பட்ட கரம் |
| சாபங்கள் | ஆசீர்வாதங்கள் |
| யூதர்கள் | புறஜாதியார் |

## I. எருசலேமின் நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும் - Judgment and hope for Jerusalem (1-12)

*யுதாவை குறித்தும் எருசலேமை குறித்தும் தீர்க்கதரிசனங்கள்* (1:1–12:6)

1. *யூதாவின் சமூக பாவங்கள்* - Judah’s social sins (1:1–6:13)

*பழைய எருசலேமும் புதிய எருசலேமும் இந்த பகுதியில் வேருபடுத்தி காட்டப்பட்டுள்ளன. பழைய எருசலேம் சீர்கேட்டினாலும், விக்கிரக ஆராதனையிலும், அநீதியிலும் நிறைந்து இருந்தது. கர்த்தர் தமது அக்கினியின் நியாயத்தீர்ப்பை கொண்டு தேசங்களை விசாரித்து இந்த காரியங்களிலிருந்து தேசத்தை பரிசுத்தப்படுத்துவார். கர்த்தரின் பரிசுத்தமாக்குதல் நிறைவடைந்தபிறகு எருசலேம் சர்வ தேசங்களுக்கும் நீதியாகவும் சர்வ தேசங்களின் குடியாகவும் திகழும்.*

*அதிகாரம் 6ல் ஏசாயா தேவாலயத்தையும் தேவனையும் குறித்து தரிசனம் காண்கிறார். பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!! என்கிற பிரபலமான வார்த்தைகள் இந்த அதிகாரத்தில் உள்ளன. ஏசாயா தான் தீட்டுப்பட்டதாக உணர்கிறார், அப்பொழுது ஒரு சேராபீன் ஒரு நெருப்பு தழலை எடுத்து ஏசாயாவின் வாயை தொட்டு பரிசுத்தப்படுத்தினான்.*

*பரிசுத்த வேதாகமத்தில் திரித்துவத்தை வெளிப்படுத்தும் பல பகுதிகளில் இந்த பகுதியும் ஒன்று ஏசாயா 6:8*

*துன்மார்க்கத்தின் தேசமான அசீரிய, எருசலேமை ஒரு மரத்தை போல் வெட்டி சாய்க்கும், பாபிலோன் தேசம் எருசலேமை அக்கினியால் எரிக்கும். ஆனால் கர்த்தராகிய தேவன் தாவீதின் வம்சத்தில் ஒரு துளிரை எழப்பன்னுவார்.*



2. *யூதாவின் அரசியல் சிக்கல்கள்* - Judah's political entanglements (7:1–12:6)

*கர்த்தர் ஏசாயாவை அஹாஸ் ராஜாவினிடத்தில் அனுப்பி வரப்போகும் சீரிய யுத்தத்தைகுரித்து அறிவிக்கிறார். அதோடு கர்த்தர், இம்மானுவேல் என்கிற ஒரு புதிய ராஜாவை அனுப்புவதாகவும் வாக்களிக்கிறார். இம்மானுவேல் என்பதற்கு கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்று பொருள்.*

*இம்மானுவேலின் ராஜ்ஜியத்தில், ஆவியின் வல்லமையால் (*power of the Spirit*) ஜனங்கள் தங்கள் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, புதிய எருசலேமில் தேவனோடு இருப்பார்கள்.*

*இந்த புதிய ராஜா, அசீரியர்கள் வேட்டிப்போட்டதும், பாபிலோனியர்கள் எரித்துப்போட்டதுமான தாவீதின் வம்சத்திலிருந்து வெளிப்படுவார்.*

*இந்த ராஜா சர்வ தேசங்களையும் ஆளுவார். எளியவரும், சிறுமைப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் தங்கள் இரட்சிக்கப்ப்படும்படி இவரை நோக்கி பார்ப்பார்கள்.*

## II. *அனைத்து தேசங்களின் நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்* - Judgement and hope for all Nations (13-27)

*நியாயத்தீர்ப்பும் இரட்சிப்பும்* - Judgment and Salvation (13:1–23:18)

1. *பாபிலோன் மற்றும் அசீரியா* - Babylon and Assyria (13:1–14:27)
2. *பெலிஸ்தியா* - Philistia (14:28–32)
3. *மோவாப்* - Moab (15:1–16:14)
4. *சீரியா மற்றும் இஸ்ரவேல்* - Syria and Israel (17:1–14)
5. *எத்தியோபியா* - Ethiopia (18:1–7)
6. *எகிப்து* - Egypt (19:1–20:6)
7. *பாபிலோன் (தொடர்ச்சி...)* - Babylon continued (21:1–10)
8. *ஏதோம்* - Edom (21:11, 12)
9. *அரபு* - Arabia (21:13–17)
10. *எருசலேம்* - Jerusalem (22:1–25)
11. *தீரு* - Tyre (23:1–18)

*ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தபோது உலகின் மகா ராஜ்ஜியமாக அசீரிய ராஜ்ஜியம் விளங்கியது, பாபிலோன் பெரும் சக்தியாக வரும் என்று யாரும் நினைக்கவில்லை. அனால் அசீரியரைபோல பாபிலோநியரும் வீழ்வார்கள் என்று தீர்க்கதரிசனமாக இங்கு கூறப்பட்டுள்ளது. கரணம், பாபிலோனின் ராஜா எல்லாரைபார்க்கிலும் தன்னை உயர்த்தி, ஏன் தேவனுக்கும் மேலாக தன்னை உயர்த்துவான். ஆகவே தேவன் அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பு வரப்பண்ணுவார்.*

*பாபிலோன் மாத்திரமல்ல, சுற்றியிருக்கும் எல்லா தேசங்களும் நியாயத்தீர்ப்பு செய்யப்பட்டு அழிக்கப்படும். தேசங்கள் அழிக்கப்பட்டாலும் அது முடிவல்ல, தேவனில் ஒரு நம்பிக்கை அவர்களுக்கும் உண்டு.*

## ***உலகம் நியாயத்தீர்ப்பு அடைவதன்மூலம் இஸ்ரவேலின் இரட்சிப்பு (24:1 – 27:13)***

## **Redemption of Israel through World Judgment (24:1–27:13)**

*இந்த பகுதி இரண்டு பட்டனங்களை குறித்து விவரிக்கிறது. ஒன்று அக்கிரமங்களினாலும் அநீதியாலும் நிறைந்த "உயர்ந்த பட்டணம்" (*lofty city*). எருசலேம், அசீரியா, பாபிலோனியரின் துன்மார்க்கம் தொடங்கி சுற்றியுள்ள அனைத்து தேசங்களின் துன்மார்க்கங்களும் நிறைந்த பட்டணம்.*

- *கர்த்தர் பூமியை நிர்மூலமாக்குகிறார்* - God's devastation of the earth (24:1–23)
- *இரட்சிப்பிற்காக நன்றி செலுத்தும் முதல் பாடல்* - First song of thanksgiving for redemption (25:1–12)
- *இரட்சிப்பிற்காக நன்றி செலுத்தும் இரண்டாவது பாடல்* - Second song of thanksgiving for redemption (26:1–19)

*இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது பட்டணம், இந்த உயர்ந்த பட்டணத்திற்கு பதிலாக அமைக்கப்படும் எருசலேம்.*

## ***இஸ்ரவேலின் தண்டனையும் ஆசீர்வாதமும் (26:20–27:13)***

## **Israel's chastisements and final prosperity (26:20–27:13)**

*தேவன் தாமே இந்த புதிய எருசலேமை ஆளுவார், பிற தேசத்தின் ஜனங்கள் யாவரும் அங்கு கூடுவார்கள். அங்கு வேதனையும் இல்லை மரணமும் இல்லை.*

## III. *எருசலேமின் எழுச்சியும் வீழ்ச்சியும்* - Rise and fall of Jerusalem (28 -39)

### *எகிப்து தேசத்தோடு உடன்படிக்கை செய்வதற்கு எதிராக எச்சரிக்கை* (28:1–35:10)

### Warnings against Alliance with Egypt (28:1–35:10)

- *மது அருந்தும் அரசியல் தலைவர்களுக்கு ஐயோ* - Woe to drunken politicians (28:1–29)
- *மத பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கு ஐயோ* - Woe to religious formalists (29:1–14)
- *தங்கள் நோக்கங்களை தேவனிடமிருந்து மறைப்பவர்களுக்கு ஐயோ* - Woe to those who hide plans from God (29:15–24)
- *எகிப்து ஆதரவாளர்களுக்கு ஐயோ* - Woe to the pro-Egyptian party (30:1–33)
- *குதிரைகளிலும் ரதங்களிலும் நம்பிக்கை வைப்பவர்களுக்கு ஐயோ* - Woe to those who trust in horses and chariots (31:1–32:20)
- *அசீரியாவின் படைக்கு ஐயோ* - Woe to the Assyrian destroyer (33:1–24)
- *அனைத்து தேசங்களுக்கு எதிராக, குறிப்பாக எதோமிற்கு எதிராக நீதி செய்யும்படி கதறல்* - A cry for justice against the nations, particularly Edom (34:1–35:10)

*கர்த்தரை விட்டு, தங்களுடைய சேனைகளின் மீதும், அண்டை நாட்டு படையின் மீதும் நம்பிக்கை வைப்பதற்கு எதிராக ஏசாயா எச்சரிக்கிறார். அவர்கள் தேவனை விசுவாசியாதபடியால் சிதறுவார்கள். தேவனிடம் அடங்கி அவரை தேடுவதே நாம் விடுதலை பெறுவதற்கு ஒரே வழி என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.*

## IV. *சரித்திர இடைவேளை (36:1–39:8)*

**Historical Interlude (36:1–39:8)**

- *சென்கேரிப் எருசலேமை கைப்பற்ற முயற்சிக்கிறான்* - Sennacherib's Attempt to Capture Jerusalem (36:1–37:38)
- *எசேக்கியாவின் வியாதியும் விடுதலையும்* - Hezekiah's Sickness and Recovery (38:1–22)
- *எருசலேமிற்கு பாபிலோனியர்களின் தூதுவர்கள்* - Babylonian Emissaries to Jerusalem (39:1–8)

*எசேக்கியா தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்தினபோதும் அவன் அதிலிருந்து எதுவும் கற்றுக்கொள்ளவில்லை. அவன் வியாதியிலிருந்து சொஸ்தமான பிறகு பாபிலோனியர்கள் அவனை பார்க்க வரும்போது, தன்னுடைய களஞ்சியங்களை அவர்களுக்கு காண்பித்து, அவர்களோடு உடன்படிக்கை (*alliance*) செய்துகொள்ள மனதாயிருந்தான். இதை ஏசாயா அறிந்தபோது, எசேக்கியாவின் சம்பத்துக்களையும் ராஜ்ஜியத்தையும் பாபிலோனியர்கள் ஒரு நாள் கைப்பற்றிவிடுவார்கள் என்று கூறுகிறார்.*

*சுமார் நூறு வருடங்களுக்கு பிறகு* II *இராஜாக்கள் 24-25 அதிகாரங்களில் பாபிலோனியர்கள் எருசலேமின் மீது படையெடுத்து அந்த நகரத்தையும் தேவாலயத்தையும் தகர்த்து, அதின் ஜனங்களை அடிமைகளாக பாபிலோனிற்கு கொண்டுசென்றனர்.*

*ஆகவே ஏசாயா புத்தகத்தின் முதல் பகுதியில் தேவன் நியாயத்தீர்ப்பின் மூலம் எருசலேமை பரிசுத்தப்படுத்தினார். ஜனங்களோ அடிமைத்தனத்திற்குள் சென்றனர் ஆனாலும் தாவீதின் வேர் துளிர்த்து அவர்களை அந்த அடிமைத்தனத்திலிருந்து*

*விடுதலை செய்யும் என்று அடிமைகளாய் சென்ற ஜனங்களுக்கு நம்பிக்கை இருந்தது.*

## V. *இரட்சிப்பு* - Salvation (40:1–66:24)

### *அடிமைத்தனத்திலிருந்து விடுதலை* - Deliverance from Captivity (40:1–48:22)

- *பாபிலோனில் சிறைபட்டவர்களுக்கு ஆறுதல்* - Comfort to the Babylonian exiles (40:1–31)
- *இஸ்ரவேலின் துக்க நாட்களின் முடிவு* - The end of Israel's misery (41:1–48:22)

*சிறையிருப்பு முடிந்தது* - The exile is over,

*அவர்களின் பாவம் கையாளப்பட்டது* - Their sin is been dealt

*ஆகவே தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். இப்போது இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பலாம், தேவன் அவர்களின் ராஜாவாக இருப்பார். பூலோகத்தின் அனைத்து தேசங்களும் அவர் மகிமையை காணும்.*

### *இப்போது*, *இந்த தீர்க்கதரிசனம் யாருடையது. ஏசாயா உரைத்ததா அல்லது வேறொருவர் உரைத்ததா*?

*ஏனெனில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட இந்த காரியங்கள் நிறைவேறும்போது, ஏசாயா இறந்து சுமார் 150 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் எசாயவோ இதை பார்த்து தீர்க்கதரிசனமாக உரைத்தார்.*

***ஏசாயா** 8:16, சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு என்றார்.*

***ஏசாயா* 29:10-12**, *10. கர்த்தர் உங்கள்மேல் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி, உங்கள் கண்களை அடைத்து, ஞானதிருஷ்டிக்காரராகிய உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடு போட்டார். 11. ஆதலால் தரிசனமெல்லாம் உங்களுக்கு முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தின் வசனங்களைப் போலிருக்கும்; வாசிக்க அறிந்திருக்கிற ஒருவனுக்கு அதைக் கொடுத்து: நீ இதை வாசி என்றால், அவன் இது என்னால் கூடாது, இது முத்திரித்திருக்கிறது என்பான், 12. அல்லது வாசிக்கத் தெரியாதவனிடத்தில் புஸ்தகத்தைக் கொடுத்து: நீ இதை வாசி என்றால், அவன் எனக்கு வாசிக்கத் தெரியாது என்பான்*

***ஏசாயா* 30:8-9,** *8. இப்பொழுது நீ போய், இது பிற்காலத்துக்கு என்றென்றைக்கும் இருக்கும்படி, இதை அவர்களுக்கு முன்பாக ஒரு பலகையில் எழுதி, ஒரு புஸ்தகத்தில் வரை. 9. இவர்கள் கலகமுள்ள ஜனங்களும், பொய்பேசுகிற பிள்ளைகளும், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள்.*

*இந்த பகுதிகளை பார்க்கும்போது ஏசாயா தாமே இந்த வார்த்தைகளை எழுதி பிற்காலத்திற்காக முத்தரித்தார்.*

## ***தேவனின் ஊழியக்காரன்* - Servant of the Lord (42-48)**

*தேவனின் நியாயத்தீர்ப்பை அடைந்த இஸ்ரவேல் தேசம், தேவனுடைய ஊழியக்காரனாய் மாறும் என்று ஏசாயா நம்பினார். அதன் மூலம் தேவன் யார் என்றும், அவருடைய நன்மைகளை என்னவென்றும் மற்ற தேசங்களுக்கு அறிவிக்கும் என்றும் நம்பினார்.*

*ஆனால் இஸ்ரவேலோ அதற்கு நேர்மாறாக தேவனுக்கு நன்றி செலுத்துவதை விட்டுவிட்டு அவரை முறுமுறுக்க தொடங்கினார்கள்.*

*கர்த்தரோ அவர்களுடைய கடினங்களை கண்டுகொள்ளவில்லை என்று சொல்லி அவரிடம் விசுவாசம் வைக்காமல் இருந்த விசுவாசத்தை இழக்க தொடங்கினர்கள். ஆகவே இந்த மீதமுள்ள பகுதி ஒரு நீதிமன்ற வழக்கு விசாரனைபோல் அமைந்திருக்கிறது.*

*கர்த்தர் ஜனங்களுடைய முறுமுருப்பிற்கு பதிலளிக்கும் விதமாக பின்வரும் காரியங்களை கூறுகிறார்:*

1. *இஸ்ரவேல் பாபிலோநியர்களிடம் சிறைபட்டுப்போனது தேவனின் நிர்விசாரத்தினாலோ அவர் கண்டுகொள்ளாததினாலோ அல்ல மாறாக அது இஸ்ரவேல் ஜனகள் மீது அவரின் நியாயத்தீர்ப்பு.*
2. *இஸ்ரவேலின் இந்த கேள்விகள் தொடர்பாக அவர் பெரிசியர்களை உயர்த்தி பாபிலோனியர்களை முறியடித்தார். அப்படி முறியடிக்கப்பட்ட பிறகு இஸ்ரவேலர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்ப முடியும்.*

*இந்த காரியங்களினிமித்தம் இஸ்ரவேல் தேசம், தங்கள் தேவன் உண்மையாகவே மிகவும் வல்லமையுள்ளவர், அவரே இப்பிரபஞ்சத்தின் ஆண்டவர் என்று அறிந்துகொள்ள வேண்டும்.*

*கர்த்தர் பெரிசிய ராஜா கோரேசை உயர்த்தி தமது ஜனத்தை பாபிலோனியர்களிடமிருந்து மீட்டார். ஆனால் இந்த பகுதியின் இறுதியில் பார்ப்போமானால், இந்த ஜனங்கள் மீண்டும் முரட்டாட்டம் பிடித்து முறுமுறுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே தேவன் தான் ஒரு புதிய காரியத்தை செய்யப்போவதாக அறிவிக்கிறார்.*

## தேவ ஊழியனும் அவனுக்கு ஏற்படும் துன்பங்களும் - Servant of the Lord and his sufferings (49:1–57:21)

*ஊழியனின் பணி* - The Servant’s mission (49:1–52:12)

- *இஸ்ரவேல் ஜனங்களை மீட்டெடுப்பது* - Restore the people of Israel
- *தேசங்களுக்கு ஒளியாக இருப்பது* - Will be a light to the nations

*ஊழியனுக்கு ஏற்படும் துன்பங்களின் மூலம் இரட்சிப்பு* - Redemption by the Suffering Servant (52:13–53:12)

- *ஊழியன் நிராகரிக்கப்படப்போகிறார்* - The servant is going to be rejected
- *ஊழியன் பிறருக்காக மரிப்பார்* - Servant will die for others
- *அந்த ஊழியனின் மரணமே பாவ நிவாரண பலி* - Servants death is the sacrifice of death of atonement

*துன்பத்தின்மூலம் ஊழியன் சம்பாதித்த இரட்சிப்பின் பலன்கள்* - Results of the Suffering Servant’s redemption (54:1–57:21)

*மரித்த ஊழியன் இப்போது மீண்டும் உயிரோடு இருக்கிறார்! அப்படியானால் நீங்கள் மரணத்தை எப்படி சந்திப்பீர்கள்?*

*சிலர் தங்களை தாழ்த்தி தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அந்த ஊழியன் மேலும் அவர் தங்களுக்கு பதிலாக செய்ததின்மேலும் நம்பிக்கை வைப்பார்கள். அவர்கள் இந்த ஊழியனின் விதையாக என்னப்படுவார்கள்.*

*அந்த ஊழியனை வெறுத்து அவர் செய்ததை ஏற்றுக்கொள்ளாதவர்கள் துன்மார்க்கர் எனப்படுவர்.*

*தேவ ஜனத்திற்கு பிறகாலத்தில் இருக்கும் மகிமை* - Future Glory of God’s People (58:1–66:24)

*இரண்டு மனந்திரும்புதலின் ஜெபங்கள்*

- *மனந்திரும்புதலின் ஜெபங்கள்* - Prayers of repentance (59:1–19)
- *தேசத்தின் மனந்திரும்புதலுக்கான ஜெபம்* - Prayer for repentance of nation (63:7–64:12)

இரண்டு விதமான ஜனங்கள் வெவ்வேறு இடத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்:

Two kinds of people will be delivered to different destinations:

துன்மார்க்கர் தேவனின் நியாயத்தீர்ப்பை சந்தித்து அவருடைய பிரசன்னத்திலிருந்தும் புதிய எருசலேமிலிருந்தும் நிரந்தரமாக எடுத்துப்போடப்படுவர் (அதிகாரங்கள் 56b-58).

மனந்திரும்பி மன்னிக்கப்பட்ட ஊழியர்கள் தேவனோடு இணைக்கப்பட்டு நித்தியமாக என்றென்றைக்கும் புதிய எருசலேமை சுதந்தரித்துக்கொள்வர். அங்கு மரணமும் இல்லை துன்பமும் இல்லை. அவர்கள் புதிய எருசலேமில் புது சிருஷ்டியாக இருப்பார்கள்.

அனைத்து தேசங்களும் தேவனுடைய இந்த உடன்படிக்கையின் குடும்பத்தில் இணைய அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பூமியில் பரலோகம்! Heaven on earth!

## *ஏசாயா புத்தகத்தின் முத்துக்கள் -*

## **Gems from the book of Isaiah**

*தேவனின் தன்மைகள் -* The attributes of God.

1. *நித்தியம் -* Eternality (40:28; 63:16)
2. *உண்மை -* Faithfulness (25:1; 49:7)
3. *மென்மை -* Gentleness (40:11)
4. *மகிமை -* Glory (40:3-5; 42:8; 59:19)
5. *நன்மை -* Goodness (58:8-14)
6. *கிருபை -* Grace (43:22-28; 48:17-22; 49:14-18; 55:1-9; 57:16-21; 63:7-8)
7. *பரிசுத்தம் -* Holiness (6:3; 57:15)
8. *நீதி -* Justice (56:1-8)
9. *நீடிய பொறுமை -* Longsuffering (42:14; 65:2)
10. *இரக்கம் -* Mercy (40:1-2)
11. *சர்வவல்லவர் -* Omnipotence (31:4-5, 8-9; 40:9-10, 12; 42:5; 64:1-4)
12. *சர்வஞானி -* Omniscience (28:23-29; 40:13-14; 41:21-24; 42:9)
13. *சர்வத்தை ஆள்பவர் -* Sovereignty (40:15-17, 21-27; 41:1-4; 44:6-20, 24-27; 45:7-12, 14-15; 46:1-4, 6-8; 66:1-2)
14. *திரியேகர் -* Triunity (48:16; 63:9-10)
15. *தனித்துவம் கொண்டவர் -* Uniqueness (40:18-20; 46:5, 9-12; 48:12-13)
16. *வார்த்தையானவர் -* Word (40:6-8; 55:10-13)
17. *எரிச்சலுள்ளவர் -* Wrath (1:28-31; 30:27-28; 33:14-16; 63:11-15, 17-19)

## *இயேசுவின் நாமங்கள்* - **TITLES FOR AND TYPES OF JESUS**

1. *இஸ்ரவேலின் பரிசுத்தர்* - Holy One of Israel (1:4)
2. *சேனைகளின் கர்த்தர்* - Lord of Hosts (1:9)
3. *இஸ்ரவேலின் வல்லவர்* - The Mighty One of Israel (1:24)
4. *யாக்கோபின் தேவன்* - The God of Jacob (2:3)
5. *கர்த்தரின் கிளை* - The Branch of the Lord (4:2; 11:1)
6. *ராஜா* - The King (6:5)
7. *இம்மானுவேல்* - Immanuel (7:14)
8. *புற ஜாதியாருக்கு பெரிய வெளிச்சம்* - The Great Light to the Gentiles (9:2)
9. *ஆலோசனைக் கர்த்தா* - Wonderful Counsellor (9:6)
10. *வல்லமையுள்ள தேவன்* - The Mighty God (9:6)
11. *நித்தியா பிதா* - The Everlasting Father (9:6)
12. *சமாதான பிரபு* - The Prince of Peace (9:6)
13. *பரிசுத்தர்* - The Holy One (10:17)
14. *மத்திய கிழக்கு தேசங்களின் தேவன்* - The God of the Middle East (19:23-25)
15. *ஆறுதலின் தேவன்* - The All Comforting God (25:8)
16. *நீதியின் ராஜா* - The Righteous King (32:1)
17. *ஜீவனுள்ள தேவன்* - The Living God (37:17)
18. *கர்த்தரின் தூதன்* - The Angel of the Lord (37:36)
19. *கர்த்தரின் மகிமை* - The Glory of the Lord (40:5)
20. *சர்வவல்லமையும் சர்வஞானியுமான தேவன்* - The Omnipotent and Omniscient God (40:12-31)
21. *ஆபிரகாமின் தோழன்* - The Friend of Abraham (41:8)
22. *தேவ ஊழியன்* - The Servant of the Lord (42:1-7)
23. *பாவத்தை மன்னிப்பவர்* - The Forgiver of Sins (43:25)
24. *முதலும் முடிவுமானவர்* - The First and the Last (44:6)

25. *துன்பப்படும் இரட்சகர் -* The Suffering Saviour (50:6; 52:14; 53:1-10a, 12)

26. *உயிர்த்தெழுந்த மீட்பர் -* The Resurrected Redeemer (53:10b-11)

27. *சர்வபூமியின் தேவன்* The God of the Whole Earth (54:5)

28. *தேவனால் அபிஷேகம்பன்னப்பட்டவர் -* The Anointed of the Lord (61:1-3)

29. *பழிவாங்கும் வெற்றிவீரர் -* The Avenging and Victorious Warrior (63:1-6)

## *இன்றைய பயன்பாடு:*
## **Application for today:**

1. *ஏசாயா புத்தகம் நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவை குறித்து விளக்கமாக கூறுகிறது. அவரே நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்வதற்கு ஒரே வழியாக இருக்கிறார்; பரலோகத்திலும் பூலோகத்திலும் அவரை தவிர நாம் மீட்க்கப்படும்படி வேறு நாமம் கொடுக்கப்படவில்லை (யோவான்* 14:6 & *அப்போஸ்தலர்* 4:12).
   *நீங்கள் இயேசு கிறிஸ்துவில் மாத்திரம் விசுவாசம் வைத்திருக்கிறீர்களா?*
2. *இந்த் உலகத்தில் நாம் கிறிஸ்துவை சேரவும் அவர் தரும் இரட்சிபை அடையவும் சில வருடங்கள் மாத்திரமே உள்ளன. மரித்த பிறகு வேறு இரண்டாவது வாய்ப்பு இல்லை.*
   The choice is very clear… will you choose to follow Him?
   *அவரை பின்பற்றுவீர்களா?*
3. *இஸ்ரவேல் தேசம் நீதியைப்போன்ற வஸ்திரம் அணிந்திருந்தாலும் அது வெறும் போர்வை மாத்திரமே அவர்கள் உள்ளம் அப்படி இல்லை என்பதை ஏசாயா தீர்க்கதரிசி கண்டுகொண்டார். ஆகவே இஸ்ரவேல் ஜனங்கள் வெளி தோற்றத்தில் மாத்திரமல்ல முழு இருதயத்தோடும் தேவனுக்கு கீழ்ப்படியும்படி தீர்க்கதரிசியான ஏசாயா இஸ்ரவேல் ஜனங்களிடம் சபதம் செய்கிறார். ஏசாயாவின் மனவிருப்பம் என்னவென்றால், அவருடைய புத்தகத்தை படிப்பவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டு துன்மார்க்கமான வழிகளை விட்டு தேவனிடம் திரும்பி மன்னிப்பும் குணமாகுதலையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே.*

   *நீங்கள் பெற்றுக்கொள்வீர்களா?*

4. கவலையின் நேரத்திலும் துன்பத்தின் நேரத்திலும் எது உங்களுக்கு ஆறுதல் தருகிறது? தேவனை பற்றிய உண்மைகளை கேட்கும்போது ஆறுதல் அடைகிறீர்களா?

5. தேவனுடைய பிள்ளைகள் யாவரும் அவருடைய ஆறுதலை அறிந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் வாஞ்சிக்கிறீர்களா? நீங்கள் ஆறுதல் சொல்லக்கூடாத சிலர் இருக்கிறார்களா? தேவ மேய்ப்பனின் ஆறுதலை எப்படி அவருடைய மந்தைக்கு எடுத்து நீங்கள் செல்ல முடியும்?